***2024-2025-ம் ஆண்டு முழுநேர கூட்டுறவு மேலாண்மை பட்டய பயிற்சிக்கான மாணவர் சேர்க்கை***

***மாதிரி விளம்பரம்***

***(Size : 12cm x 12cm)*** ***Advertisement through DIPR***

# தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்,

**என்.வி.நடராசன் மாளிகை,170, பெரியார் ஈ.வெ.ரா. நெடுஞ்சாலை,**
**கீழ்ப்பாக்கம், சென்னை – 600 010**

## கூட்டுறவு மேலாண்மை நிலையங்களில் 2024–25 ஆம் ஆண்டு – முழுநேர கூட்டுறவு மேலாண்மை பட்டய பயிற்சியில் சேர்வதற்கான விண்ணப்பங்கள் இணையவழி மூலம் மட்டுமே வரவேற்கப்படுகின்றன

பயிற்சிக்காலம் : 1 வருடம்
2 பருவ முறைகள்

## தகுதிகள்

முதல் பருவம் : 6 மாதங்கள்
இரண்டாம் பருவம் : 6 மாதங்கள்

- **கல்வி தகுதி** : +2 வகுப்பில் தேர்ச்சி அல்லது 10+3+3 (பத்தாம் வகுப்பு தேர்ச்சி (SSLC) + பட்டயப்படிப்பு தேர்ச்சி (Diploma) + பட்டப்படிப்பு தேர்ச்சி (Any Degree) பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இடஒதுக்கீடு வழங்கப்படும்.
- 01.08.2024 அன்று குறைந்தபட்சம் 17 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும். அதிகபட்ச வயது வரம்பு இல்லை.
- கூட்டுறவு மேலாண்மை பட்டயப்பயிற்சி தமிழில் மட்டுமே பயிற்றுவிக்கப்படும்.
- பயிற்சிக்கான தேர்வுகளை தமிழில் மட்டுமே எழுத வேண்டும்.
- இப்பயிற்சிக்கு அதிகாரபூர்வ இணையதளமான www.tncu.tn.gov.in மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.
- பயிற்சிக்கு 10.06.2024 அன்று முதல் இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம்.
- இணையதளத்தின் மூலம் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து அதற்கான சான்றிதழ்கள் மற்றும் புகைப்படம் பதிவேற்றம் (Upload) செய்ய வேண்டும்.
- விண்ணப்ப கட்டணம் ரூ.100/–ஐ இணையவழி (Billdesk Payment Gateway) மூலம் மட்டுமே செலுத்த வேண்டும்.
- ஒன்றுக்கும் மேற்பட்ட மேலாண்மை நிலையங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும் எனில் தனித்தனியே இணையவழியில் ரூ.100/– விண்ணப்ப கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும்.
- இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் 19.07.2024 அன்று பிற்பகல் 5.00 மணி வரை மட்டும். அதற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- பயிற்சிக்கான கூடுதல் விவரங்கள், வழிகாட்டு நெறிமுறைகள் ஆகியவற்றை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் இணையதள முகவரி www.tncu.tn.gov.in மூலம் தெரிந்துகொள்ளலாம்.
- இணையவழி மூலம் விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
- இணையவழியாக அல்லாமல் நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ கூட்டுறவு மேலாண்மை நிலையங்களுக்கு விண்ணப்பித்தால், அவ்வாறு பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- பயிற்சிக்கான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு பயிற்சியில் சேர்வதற்கு தகுதி பெற்றவர்கள் விவரம் பயிற்சி நிலையங்கள் மூலம் தெரிவிக்கப்படும்.
- பயிற்சியில் சேர்வதற்கு தேர்வு செய்யப்படும் பயிற்சியாளர்கள் சம்மந்தப்பட்ட பயிற்சி நிலையத்திற்கு உரிய ஆவணங்களுடன் நேரடியாக சென்று பயிற்சியில் சேர்ந்துக்கொள்ள வேண்டும்.
- தேர்வு செய்யப்பட்ட பயிற்சியாளர்கள் பயிற்சிக்கான கட்டணம் ரூ.18,750/–ஐ முழுவதும் ஒரே தவணையில் இணையவழி மூலமே (Billdesk Payment Gateway) செலுத்த வேண்டும்.